சிலையொன்றும், சாலை பெயரும் அளவும் குறிக்கப்பட்ட கற்கள் மூன்றும் மாநில தொல்பொருள் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பானதாகக் குறிக்கத் தக்கவை இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்க் கற்களே ஆகும். அவைகளில் இரண்டில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி நாலாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. மற்றொன்றில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி ஆறாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. பாண்டியர் சின்னம் இருமீனும், நடுவில் செண்டும் கொண்ட அகப்பை உடையது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி நூலகக் கட்டிடம்.

*வினா எண் 129—திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக் கல்லூரி நூலகத்திற்குப் புதியக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னை வியாசர்பாடியில் குடிநீர் குழாய்கள்.

*வினா எண் 130—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) சென்னை வியாசர்பாடி பகுதியில் குடிதண்ணீரோடு சாக்கடைத் தண்ணீரும் கலந்துவிட்டது என்பதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(ஆ) அதற்கான காரணமென்ன என்பதைப்பற்றி கண்டுபிடிக்கப் பட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு குடி தண்ணீரில் சாக்கடை நீர் கலக்காமல் தடுக்கப்பட்டது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS